THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Saturday, the 24th January 1970.

The House met in the Council Chamber, *Fort St. George*, at four of the clock, Mr. Chairman (The Hon. Thiru M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Mr. CHAIRMAN : We shall now take up the postponed questions.

Crop failure due to drought.

a * 36. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the acreage affected by crop failure due to drought in our State district-wise during 1969 ;

(*b*) the number of families affected thereby ; and

(*c*) whether there is any proposal to give them subsidy to enable them to cultivate their lands next year ?

வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1969-ஆம் வருடம் நம் மாநிலத்தில் மாவட்ட வாரியாக வறட்சியால் பாதிக்கப்பட்டு, பயிருடன் கரிந்து (தீய்ந்து) போன நிலங்கள் (வயல்கள்) பரப்பு எவ்வளவு ?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை ?

(உ) அவர்கள் மறு வருடம் தங்கள் வயல்களில் பயிர் எற்றுவதற்கு மானியம் வழங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) மொத்தப் பரப்பு 25.03 லட்சம் எக்கர்கள் (மாவட்ட வாரியாக விவரம் தயாராக இல்லை).

(இ) விவரங்கள் இல்லை. பாதிக்கப்பட்ட மக்கள் தொகை 2,471,958.

(உ) இல்லை.

Tamil Nadu Raffle Scheme.

*37. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Finance be pleased to state :—

(*a*) whether there is any proposal to increase the number and quantum of prizes offered under the Tamil Nadu Raffle Scheme ; and

(*b*) if so, the details thereof ?

---

a Postponed from the list of questions for the 23rd January 1970

[24th January 1970

தமிழ் நாடு பரிசுச் சீட்டு திட்டம்.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தமிழ் நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பரிசுகளின் தொகையையும், எண்ணிக்கையையும் அதிகரிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM : Up to December last year raffle tickets of other States were selling like hot cakes in Tamil Nadu. After the prizes were increased for the Pongal Draw—the tickets of some other States have completely gone out of this State, and all the 10 lakhs of tickets issued by this State have been sold away several days ago. That is a practical demonstration that by increasing the prizes the sale of tickets from other States can be prevented and also the Government are earning this time Rs. 55 lakhs in spite of the added prizes. whereas in an ordinary month by issuing only six series and by many of them remaining unsold, they might have made at the most much less. Will the Government, therefore, consider the question of increasing the prizes ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Certainly the Government will consider it if it will enhance our resources.

திரு. டி. கே. சுப்பையா : தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் நமது பரிசுச் சீட்டுகளை விற்பதற்கு ஏஜெண்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார் களா ? அப்படியிருந்தால், எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பிற மாநிலங்களில் நியமிக்கப் படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ஒரு மாநிலத்தின் பரிசு ஐந்து லட்சமாக இருக்கும்போது நம்முடைய பரிசுகளையும் ஐந்து லட்ச மாக மாற்றினால், நம்மிடம் நமது சீட்டுகள் விற்பனையாகின்றன. நாம் ஐந்து லட்சமாக மாற்றிய பிறகு இன்னொரு மாநிலத்தில் பத்து லட்சமாக மாற்றினால், நாமும் மாற்றுகின்ற துர்பாக்கியமான நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு ஒரு மாநிலத்தில் விற்கும் சீட்டுகள் மற் றொரு மாநிலத்தில் விற்பனையாகி, நம் மாநிலப் பணம் வேறு மாநிலத் திற்குச் செல்லாத எண்ணம் எல்லா மாநில முதலமைச்சர்களும் கூடி கலந்து பேசி ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற தென் மண்டல மாநாட்டில் நமது முதலமைச்சரும், மற்ற முதலமைச்சர்களும் கலந்து பேசினார்கள். கேரள மாநில நிதியமைச்சர் தமிழ் நாட்டுப் பரிசுச் சீட்டினால் தங்களுக்குப் பாதகம் ஏற்படுவதாகக் குறை தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட கருத்துக்கள் முழுமையானதாகத் தெரியவில்லை. இருந்தாலும், எந்த வெளி மாநில டிக்கெட்டுகளும் இங்கே விற்பதற்கு இப்போது தடை எதுவும் இல்லை. அப்படிப்பட்ட தடை விதிக்கலாமா, வேண்டாமா என்பது இப்போது பல மாநிலங் களிடையே பரிசீலனையில் இருக்கிறது. எந்த வகையில் அனுகூலமாக அமைகிறதோ, அப்படிப்பட்ட முடிவுகளை நம்முடைய மாநிலத்தில் மேற் கொள்ளலாம்.

24th January 1970]

திரு. எம். எத்திராஜு-லு : குதிரைப் பந்தயத்தில் விற்கப்படும் டிக்கெட்டுகள் ஒவ்வொன்றிற்கும் தமிழக அரசுப் பரிசுச் சீட்டு ஒவ்வொன்று வாங்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை. அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்து வாங்குவது இது.

Mr. CHAIRMAN : Questions 23 and 38 are postponed.

Police Force.

***41. Q.—Thiru M. RAJAH IYER :** Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether there is any proposal to increase the strength of the Police Force in the State ; and

(*b*) if so, the details thereof ?

காவல் படை.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம்மாநிலத்தில் காவல் படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Police Stations.

***42. Q.—Thiru V. ISVARMURTI :** Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any Government Order stating that the Police Stations should register certain minimum number of cases (of law and order) every month ;?

காவல் நிலையங்கள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

காவல் நிலையங்கள் ஒவ்வொரு திங்களிலும் சட்டமும், ஒழுங்கும் பற்றி குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள வழக்குகளைப் பதிவு செய்ய வேண்டும் என வரையறுத்து அரசு ஏதேனும் ஆணை பிறப்பித்ததா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

Demonstrators and Tutors in Engineering Colleges.

***43. Q.—Thiru M. RAJAH IYER :** Will the Hon. the Minister for Education and Health be pleased to state —

(*a*) whether Demonstrators and Tutors in Engineering Colleges are paid salaries according to the University Grants Commission scales of pay ; and

(*b*) if not, the reasons therefor ?